

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி யா.ஒத்தக்கடையில் பல்லாயிரக்கணக்கானோருக்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, வடிவேல் முருகன், ஒத்தக்கடை சரவணன், வக்கீல் கலாநிதி, மீராஜான், வக்கீல் மூர்த்தி, பெ.சசிக்குமார், அண்ணாமலை, முருகேஸ்வரி சரவணன், தபாக் ரவி மற்றும் கழகத்தினர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



வேலூர் மாவட்டம் தொரப்பாடிபகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளர் ஆர்.கே.ஐயப்பன் ஏற்பாடு செய்திருந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பொதுக் கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., சிறப்புரை ஆற்றினார். இதில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் ஜி.ரமேஷ், மண்டல குழு தலைவர் வெங்கடேசன், தலைமைக் கழக பேச்சாளர்கள் போடி காமராஜ், கழிஞ்சூர் கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.ஜி.ஆறுமுகம், அல்லாபுரம் பகுதி செயலாளர் சி.எம்.தங்கதுரை, கணியம்பாடி ஒன்றிய கழக செயலாளர் என்.கஜேந்திரன், சங்கரன் பாளையம் பகுதி செயலாளர் ஜி.பாலமுரளி கிருஷ்ணன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பி.தேவராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இ.தினேஷ்குமார், பென்னாத்தூர் பேரூர் செயலாளர் பி.அருள்நாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கந்தர்வக்கோட்டை தொகுதியில்

# குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு உறுதி!

சென்னை, டிச.17-

சட்டப் பேரவையில் கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மா.சின்னதுரை எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**மா.சின்னதுரை:** புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் 15 தினங்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் வழங்கப்படுகிறது. அமைச்சர் அவர்கள் பெரும் முயற்சி எடுத்தாலும், பழைய குடிநீர்க் குழாய்கள் சீர் செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தால், தினசரி தண்ணீர் கிடைப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி கிடைப்பதற்கும், கறம்பக்குடி, கந்தர்வகோட்டை பகுதிகளில் காவிரி கூட்டுக் குடிநீர் கிடைப்பதற்கும் உதவி செய்திடுவார்களா என்பதை கேட்டு அமைகிறேன்.



**அமைச்சர் கே.என். நேரு:** இது குறித்து நான் ஏற்கெனவே அறிவேன். புதுக்கோட்டை மாவட்டத்திற்குச் செல்கிற போது, விராலிமலை வழியாக வழியோர கிராமங்களுக்குத் தந்து, நேரடியாக புதுக்கோட்டைக்குச் சென்று, 17 MLD குடிநீர் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், குழாய்கள் பழுதுபட்டிருக்கின்ற காரணத்தால், தண்ணீர் சரியாகச் செல்லவில்லை. எனவே, முதலமைச்சர் அவர்கள் அதற்கான நிதி ஒதுக்கி, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. அதைக்காட்டிலும், ஒட்டு மொத்த புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் 1,900 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில், ஒன்றிய அரசு, ஜல் ஜீவன் திட்டத்தை 2024 ஆம் ஆண்டுடன் முடித்துக்கொண்டுவிட்டதால், அதற்கு ஒன்றிய அரசின் நிதியுதவி தர இயலாது என்று சொல்லிவிட்டது.

தற்போது, 2025 ஆம் ஆண்டுவரை ஜல் ஜீவன் திட்டத்தை நீட்டித்துத் தருவதற்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் முதலமைச்சர் அவர்களின் கடிதம் பெற்று, மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது, 2027 ஆம் ஆண்டு, 8 ஆவது மாதம் வரை நீட்டித்துத் தருவதாக உறுதியைத் தந்திருக்கிறார்கள். அப்போது மாநில அரசின் நிதி 1,900 கோடி ரூபாயில், உரிய பங்கினை ஒன்றிய அரசும் தர வேண்டும். அந்த நிதி ஒதுக்கீட்டில் சற்று தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இல்லையென்றால், ஒட்டுமொத்த புதுக்கோட்டை மாவட்டத்திற்குமான புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும். எனவே, இந்த அரசு அதற்கான முயற்சியை தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. கந்தர்வகோட்டை பகுதியிலும் ஏற்கெனவே உள்ள குழாய்கள் பழுதுபட்டிருக்குமானால், அவற்றை உடனடியாக சரி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.



தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் சிந்தலைசேரி மதர் தெரசா முதியோர் இல்லத்தில்கழக மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., நலத்திட்ட உதவிகள், மதிய சாப்பாடு வழங்கினார். இதில் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், உத்தமபாளையம் மேற்கு ஒன்றிய செயலாளர் குமரன், பண்ணைப்புரம் பேரூர் செயலாளர் இளங்கோ, கிளை செயலாளர் நூருது மற்றும் துணை அமைப்பாளர் முருகன், இளைஞர் அணி பிரிட்டோ ஒன்றிய பொருளாளர் மணி, கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை கே.கே. நீலமேகம்

### டிசம்பர் 17 (1965)



**சுயமரியாதை இயக்க காலந்தொட்டு சீர்திருத்த பெரும் பணியாற்றியவர். ‘குடந்தை பெரியார்’ என அழைக்கப்பட்டவர்.**

**நீண்டகாலம் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி துணைத் தலைவராக இருந்தவர்.**

**தி.மு.கழகத்தின் துவக்க காலத்தில் பொருளாளர் பொறுப்பேற்றிருந்தவர்.**

**அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற மதிப்பும், பாசமும் கொண்டிருந்தவர்.**

**“தஞ்சைத் தரணி ஈன்றெடுத்த தங்கம் – தன்மான இயக்கத்தின் தலைதாழாச் சிங்கம் – குடந்தைப் பெரியார் நீலமேகம் அவர்கள் மறையவில்லை; மனதில் நிறைந்துவிட்டார்” என தலைவர் கலைஞர் அவர்களால் ‘முரசொலி’ தலையங்கத்தில் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நம்மை காக்கும் வலுவான கரங்களாக கழக அரசு உள்ளபோது

# பொதுமக்களின் கவலைகள் வெள்ளமாக வழிந்தோடிவிடும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு

சென்னை, டிச. 17

நம்மை காக்கும் கரங்களாக ‘ திராவிட மாடல்’ அரசு உள்ளபோது எவ்வளவு மழை வந்தாலும் பொதுமக்களின் கவலைகள் வெள்ளமாக வழிந்தோடிவிடும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசின் செயல்பாடுகளை “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 16.12.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-


தினகரன்
டிசம்பர் 16, 2024 திங்கட்கிழமை
காக்கும் கரங்கள்
வங்கக்கடலில் உருவான காற்றழுத்தம் காரணமாக தென்மாவட்டங்கள் கடந்த 3 தினங்கள் கனமழையை எதிர்கொண்டன. கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்கள் பாதிப்பை எதிர்கொண்டன. ராமநாதபுரம் மற்றும் மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்கள் நல்ல மழையை எதிர்கொண்டன.
தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் மற்றும் காட்டாற்று தண்ணீர் தூத்துக்குடியை சிதறடித்தது. வெள்ளத்தில் மிதந்த தூத்துக்குடியில் 6 ஆயிரம் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது. தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலை துண்டிக்கப்பட்டது. நெல்லை, தென்காசி மாவட்டங்களிலும் ஒரு லட்சம் கன அடி தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் சென்றதால், வயல் வெளிகள் மூழ்கின. பல சாலைகளில் அரிப்பு ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்தம் காரணமாக தென்மாவட்டங்கள் கடந்த 3 தினங்கள் கனமழையை எதிர்கொண்டன. கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்கள் பாதிப்பை எதிர்கொண்டன. ராமநாதபுரம் மற்றும் மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்கள் நல்ல மழையை எதிர்கொண்டன. தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் மற்றும் காட்டாற்று தண்ணீர் தூத்துக்குடியை சிதறடித்தது. வெள்ளத்தில் மிதந்த தூத்துக்குடியில் 6 ஆயிரம் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது.

தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலை துண்டிக்கப்பட்டது. நெல்லை, தென்காசி மாவட்டங்களிலும் ஒரு லட்சம் கன அடி தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் சென்றதால், வயல்வெளிகள் மூழ்கின. பல சாலைகளில் அரிப்பு ஏற்பட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தென்மாவட்டங்களில் கனமழை என்ற தகவலை கேள்விப்பட்டவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்தந்த மாவட்டங்களுக்குரிய பொறுப்பு அமைச்சர்களையும், அதிகாரிகள் குழுவையும் களப்பணியாற்ற விரைந்து அனுப்பி வைத்தார்.

வெள்ளமீட்பு பணிகளுக்காக பேரிடர் மீட்பு படையும் களம் இறங்கிய நிலையில், அரசு நிர்வாகம் துரித கதியில் இயங்கியது. இத்தனைக்கும் வானிலை மையம் ரெட் அலர்ட் அறிவிக்கும் முன்பே, நெல்லை, தென்காசி மாவட்டங்களில் 12ம் தேதி கனமழை கொட்டி தீர்த்திருந்தது. இச்சூழ்நிலையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர், வெள்ளநீர் தேங்கிய பகுதிகளில் உடனடியாக மழை நீரை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டனர்.

கலைஞர் கனவு திட்டமான வெள்ளநீர் கால்வாய் பணிகள் நிறைவுற்ற நிலையில், தாமிரபரணி ஆற்றில் அதிக தண்ணீர் செல்வதை தடுக்கும் வகையில், வெள்ள நீர் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் காரணமாக தாமிரபரணியில் உள்ள தரைப்பாலங்கள் மட்டுமே மூழ்கின. நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை வெள்ளம் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றும் வகையில் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்களை அங்கு தங்க வைத்தனர்.

அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களும் உடனடியாக வழங்கப்பட்டன. துண்டிக்கப்பட்ட தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலை உள்ளிட்ட சாலைகள் உடனடியாக சரி செய்யப்பட்டு, போக்குவரத்தை அரசு நிர்வாகம் சீர்படுத்தியது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள், கால்நடைகள், விளை நிலங்கள் உள்ளிட்டவை களின் விபரங்கள் தொகுக்கப்பட்டு, மாவட்ட நிர்வா கங்கள் மூலமாக நிவாரண பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. தென்மாவட்டங்களில் வெள்ள சேதம் குறித்து தமிழக முதல்வரும் தொடர்ந்து இரு தினங்கள் தலைமை செயலகத்தில் ஆய்வு கூட்டங்கள் நடத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள உத்தவிட்டார்.

வெள்ளபாதிப்பில் குடிநீர் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதோடு, குடிநீர் குழாய்களை சரி செய்யும் பணிகளும் நடந்து வருகின்றன. மழைநீர் அதிகம் தேங்கிய இடங்களில் ராட்சத மின்மோட்டார்கள் மூலம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அரசு நிர்வாகமும், தன்னார்வலர்களும் கைகோர்த்து களம் இறங்கியதால், மழை வெள்ள சேதங்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டன.

தமிழகத்தில் 4 ஆண்டுகளுக்கு முன்பு வரை வெள்ளமெல்லாம் வடிந்த பிறகு, நிவாரண தொகை அறிவித்துவிட்டு களத்திற்கு வரும் ஆட்சியாளர்களை எண்ணி பார்க்க வேண்டிய தருணமிது. கனமழை, வெள்ளம் உள்ளிட்ட பேரிடர்கள் எப்போதுமே தவிர்க்க முடியாதது. ஆனால் நம்மை காக்கும் கரங்கள் வலுவாக இருக்கும்போது, பொதுமக்களின் கவலைகள் எல்லாம் வெள்ளமாக வழிந்தோடிவிடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில்

# குமாரபாளையத்தில் கழக முப்பெரும் விழா கூட்டம்! திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

நாமக்கல் டிச. 17

குமாரபாளையம் தி.மு. க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள், மாவட்ட இளைஞரணி சார்பில் டாக்டர் கலைஞர் நூலகம் திறப்பு விழா, வடக்கு நகர கழகம் சார்பில் 1000 பெண்களுக்கு பட்டுப்புடவை மற்றும் 500 மாணவர்களுக்கு புத்தகப்பை நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் முப்பெரும் விழா குமாரபாளையம் ஆனங்கூர் பிரிவு சாலையில் நடைபெற்றது. கூட்டத்தில் குமாரபாளையம் வடக்கு நகர பொறுப்பாளர் விஜய்கண்ணன் தலைமை தாங்கினார். தெற்கு நகர பொறுப்பாளர் ஞானசேகரன் வரவேற்றார். கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் ஆகியோர் கலந்து கண்டு சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பேசும்போது, தமிழக மக்கள் சந்தோஷமாக வாழ காரணம் தி.மு.க. வின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தான். ஜெயலலிதா உயிருடன் இருந்த வரை உதய் மின்திட்டத்தில் கையொப்பம் போடவில்லை. ஆனால் ஆவருக்கு பின் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் கையொப்பம் போட்டது தான் மின் கட்டண உயர்வுக்கு காரணம். மக்களை ஏமாற்றும் விதத்தில் சேலை கொடுப்பது, தட்டு கொடுப்பது ஆகியவற்றை அ. தி.மு.க. வினர் செய்து வந்தனர். இவையெல்லாம் தற்காலிகம் தான்.

ஆனால் நிரந்தரமாக பெண்களுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் உரிமை தொகையாக ஆயிரம் கொடுத்தவர் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு கூட மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்து, பெண்கள் கல்வி பயில உதவி வருபவர் ஸ்டாலின் அவர்கள். விளையாட்டு துறையில் பல்வேறு சாதனைகள் படைத்து வருபவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். விஜய் என்று பெயர் வைத்தவர் எல்லாம் வெற்றி பெற முடியாது. தி.மு.க.வை யாராலும் வெற்றி பெற முடியாது. கோட் என்றால் ஆடு அந்த ஆடும் இந்த ஆடும் ஒன்று தான் என்பது நேற்றே முடிவாகி விட்டது. பாரதிய ஜனதாவின் கைத்தடிகளாக, இன்று திராவிட இயக்கத்தை கைநீட்டி பேசுவதற்கு வந்திருக்கக் கூடிய அந்த நடிகர் தொடங்கிய இருக்கக்கூடிய கட்சியை தூள் தூளாக்க கூடிய இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம்.

அவர் தனது மாநாட்டில் ஏகப்பட்ட தலைவர்களின் படங்களை வைத்து விட்டு, அவர் பேசுகையில், 200 தொகுதிகளையும் கைப்பற்றுவோம் என கூட்டணி இருமாப்போடு பேசிக் கொண்டிருக்கிறீர்களே, உங்களுடைய கட்சி மைனஸில் செல்கிறது. அந்த தம்பிக்கு நான் சொல்கிறேன், இதேபோல் திமுகவை பார்த்து சொன்ன பல பேர் ஒன்றுமில்லாமல் ஆகியுள்ளனர் என தெரிவித்தார். மேலும் இபிஎஸ் மற்றும் ஓபிஎஸ் ஆகியோர் இணைந்து எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா நடத்திய கட்சியை ஒன்றும் இல்லாமல் ஆக்கியுள்ளனர். ஜானகி அம்மாவின் நூற்றாண்டு விழாவில் எம்.ஜி.ஆரை கூட்டி வந்து ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் பேச வைக்கின்றனர். உண்மையில் அவர் என்ன பேசி இருப்பார் தெரியுமா? நான் ஆரம்பித்த இந்த அதிமுக என்ற இயக்கத்தை ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகள் சிறப்பாக காப்பாற்றி வந்தீர்கள். ஆனால் பத்து முறை தோற்க வைத்து, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, 11 தொகுதியில் டெபாசிட் போகும் அளவிற்கு இந்த கட்சியை கெடுத்து குட்டிச் சுவராக்கியவர் எடப்பாடி பழனிச்சாமி என கூறியிருப்பார்.

இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து ஆயிரம் பெண்களுக்கும் 500 மாணவ மாணவர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில், நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், மாவட்ட பொருளர் ராஜாராம், தலைமை சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ஜே.கே.எஸ். மாணிக்கம், மாநில வலைதள அணி பொறுப்பாளர் ரியா, மாவட்ட அவை தலைவர் இரா நடன சபாபதி, ஓ ஆர் செல்வராஜ், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராமங்களான ஆலப்பாக்கம், கன்னிகாபுரம், தச்சம்பட்டரை ஆகிய கிராமங்களில் உள்ள பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று ரேசன் பொருட்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பகுதி ரேசன் கடையை சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் முனி ரத்தினம் ரேசன் கடையை திறந்து வைத்தார். இதில் ஊராட்சி மன்ற தலைவர்கள் சி.எஸ்.கே. குமரேசன், கிருஷ்ணன், ஒன்றியக் குழு தலைவர் அனிதா குப்புசாமி, பொதுக்குழு உறுப்பினர் மாணிக்கம், தெற்கு ஒன்றிய செயலாளர் ஓச்சேரி எம். பாலாஜி, ஊராட்சி செயலாளர் வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.